بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 1:6, ரபியுல்-அவ்வல், ஹிஜ்ரி 1426, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, E-Mail : suvanam@gmail.com

## மீலாது விழா ? கொண்டாடுவோம் வாருங்கள்!

**K.L.M. இப்ராஹிம்(மதனி).M.A**

நபி(ஸல்) அவர்களை நேசிப்பது இஸ்லாத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். யார் தன் பிள்ளை, பெற்றோர் மற்றும் எல்லா மனிதர்களை விடவும் நபி(ஸல்) அவர்களை நேசிக்கவில்லையோ அவர் உண்மையான மு∴மினாக முடியாது.

அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

(நபியே!) நீர் கூறும் உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டுவிடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும்விட உங்களுக்குப் பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டு வருவதை எதிர்பார்த்து இருங்கள் - அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை.

*(அல்-குர்ஆன்-9:24)*

**தன் பெற்றோர் இன்னும் பிள்ளை மற்றும் எல்லா மனிதர்களை விடவும் நான் நேசமுள்ளவராக ஆகும் வரை உங்களில் எவரும் உண்மையான மு∴மினாக முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.** *(புகாரி)*

என் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக தன் பெற்றோர் இன்னும் பிள்ளையைவிடவும் நான் நேசமுள்ளவராக ஆகும் வரை உங்களில் எவரும் உண்மையான மு∴மினாக முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(புகாரி)*

(ஒரு நாள்) நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது நபி(ஸல்) அவர்கள் உமர்(ரலி) அவர்களின் கையை பிடித்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! என்னைத் தவிர மற்ற எல்லா வஸ்துக்களை விடவும் உங்களை நான் மிகவும் நேசிக்கின்றேன் என உமர்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் என் உயிர் என் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக உன்னை விட நான் மிக நேசமுள்ளவராக ஆகும் வரை நீ உண்மையான மு∴மினாக முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு உமர்(ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக இப்போது நீங்கள் என் உயிரை விடவும் என்னிடத்தில் மிக நேசமானவர்கள் எனக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் இப்போதுதான் நீங்கள் உண்மையான மு∴மீன் எனக்கூறினார்கள். *(புகாரி)*

### நபி(ஸல்) அவர்களை நேசிப்பது எப்படி?

நபி(ஸல்) அவர்களை நேசிப்பதென்பது அல்லாஹ்வும் இன்னும் அவனின் தூதர் நபி(ஸல்) அவர்களும் ஏவியவைகளை எடுத்தும், தடுத்தவைகளை தடுத்தும் நடப்பதுதான். இப்படித்தான் நபி(ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும்.

அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்

*தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க...*

உள்ளே...

கஸ்டமர் கேர் - 3
புகையும் நுரையீரல்கள் - 4
செல் ∴போன் - 7
வவ்வால்கள் (அதிசயப் படைப்புகள்)-10
குறுக்கெழுத்துப் போட்டி - 12

## இறுதி நபியின் இறுதிப் பேருரை

***(அ∴பஸலுல் உலமா.அஹ்மது(பாக்கவி). M.A, M.Lit)***

ஹிஜ்ரி 10, புனித ஹஜ் நெருங்கிக் கொண்டிருந்தது!

பெருமானார்(ஸல்) அவர்கள் மக்காவை அணுகியபோது, அரபு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், ஏன்? வெளிநாடுகளிலிருந்தும் கூட ஆயிரமாயிரம் ஹாஜிகள் பெருமானார் அவர்களின் திருக்கூட்டத்துடன் வந்து இணைந்தனர்.

அர∴பாத் பெருவெளியில் திரண்டது இந்த மனித வெள்ளம்! எங்கு நோக்கினும் மனிதக் கூட்டந்தான்! இருபத்தி மூன்றாண்டுகளுக்கு முன்னர் பெருமானாரைப் பேசவும் விடாமல் விரட்டியடித்த அதே மக்கள் இன்று மக்காவின் அர∴பாத் பெருவெளியில் குழுமினர்.

இந்த இருபத்தி மூன்றாண்டுகளிலே எப்படிப்பட்ட அற்புதம் நடந்து விட்டது! என்பதை எண்ணிப்பார்க்கவே பெரும் அதிசயமாக உள்ளது.

பெருமானார்(ஸல்) அவர்களுக்கு வாழ்வில்லையெனத் துரத்தியடித்த அதே மக்கா நகரம் அந்நாளில் அவர்களின் ஒரு சொல்லுக்காகக் காத்துக்கிடந்தது!

பெருமானாரைக் கொலை செய்வதையே தங்கள் இலட்சியமெனக் கொண்டிருந்தவர்கள், இன்று அவர்களது உயிர்த் தோழர்களாய், அவர்களுக்காக உயிர்த் தியாகம் செய்வதே தங்களின் பாக்கியம் என நினைப்போராய்ச் சுற்றி நின்றனர்!

பெருமானாரை இரத்தக் காயங்களுடன் விரட்டியடித்த தாயிப் நகர மக்கள், இன்று அவர்களது ஆதரவாளர்களிலே முன்னணி வீரர்கள்!

பெருமானார் அவர்களைத் தூற்றுவதையும், தீங்கிழைப்பதையும், தொழிலாகக் கொண்டிருந்தோர் பெருமானாரின் புகழ் பாடுவதைப் பெருமையாக எண்ணினர் அன்று! சுருங்கச் சொன்னால், ஒரே அணியில் பெரும் சக்தியாக எதிர்த்து நின்ற அந்த அரபு நாடு அன்று அவர்களது சுட்டுவிரலிலே அசைந்தாடியது.

பெருமானார்(ஸல்) அவர்கள் மேடையிலே ஏறி நின்றனர், பிரமாண்டமான அந்த மக்கள் வெள்ளத்தின் கண்களும், காதுகளும் கூர்மையாயின. எங்கும் நிசப்தம்! ஊசி விழுந்தால் கூட கேட்கத்தக்க அமைதி!

பெருமானார்(ஸல்) அவர்களின் கருணை வழியும் கண்கள் அந்த மனித வெள்ளத்தை நிதானமாக நோக்கின.

மக்களே! நன்றாகக் கவனத்துடன் கேட்டுக்கொள்ளுங்கள், ஏனெனில் அடுத்த வருடம் இதே நாளில், இதே இடத்தில் உங்கள் மத்தியில் நான் இருப்பேனாவென்பது எனக்குத் தெரியாது.

இந்த நாளும், இந்த மாதமும், இந்த நகரமும் பரிசுத்தமானவை. அது போலவே உங்களது உயிரும், உடமையும், கண்ணியமும் பரிசுத்தமானவையாகும். இறுதி நாள் வரையிலே அவை பரிசுத்தமாயிருக்க வேண்டும். யாரும் அவற்றில் தலையிடவோ, அபகரிக்கவோ கூடாது. இறைவனின் சமூகத்திலே இவற்றிற்கெல்லாம் நீங்கள் கணக்களிக்க வேண்டியதிருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

மக்களே! உங்கள் மனைவியரின் மீது உங்களுக்கு உரிமையுள்ளதுபோல், உங்கள் மனைவியருக்கும் உரிமையுண்டு. அவர்களிடம் அன்புடனும் கருணையுடனும் நடந்து கொள்ளுங்கள். இறைவனுக்குப் பயந்து நன்மையைப் பேணி வாருங்கள்.

அஞ்ஞான காலத்தில்(இஸ்லாத்திற்கு முன்பு) ஏற்பட்ட கொலைகளும், கொடுஞ் செயல்களுக்கும் பழிவாங்கும் உரிமை இன்று முதல் ரத்து செய்யப்பட்டுவிட்டது. முதலாவதாக எனது குடும்பத்தைச் சார்ந்த இப்னு ரபீஆவின் கொலைக்குப் பழிவாங்குவதை நான் மனப்பூர்வமாக நிறுத்திவிட்டேன்.

வட்டி வாங்குதல் உங்களுக்குத் தடுக்கப்படுகிறது. அஞ்ஞான காலத்தில் ஏற்பட்ட வட்டித் தொகையனைத்தும் இன்று முதல் ரத்து செய்யப்படுகின்றது. கடன்பட்டவர்கள் அசலை மட்டும் திருப்பிக்கொடுத்து விட்டால் போதும். முதலாவது எனது சிறிய தந்தையார் அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப்(ரலி) அவர்களுக்கு வரவேண்டிய வட்டித் தொகையனைத்தும் தள்ளுபடி செய்யப்படடுவிட்டன.

ஜாதித்திமிர், நிறத்திமிர், குலத்திமிர் அனைத்தும் இதோ காலின் கீழிட்டு மிதிக்கிறேன். அரபிகள் அஜமி (அரபியல்லாதார்)களைவிட உயர்ந்தோரல்ல. அஜமிகள் அரபியர்களைவிட உயர்ந்தோருமல்ல. அனைவரும் ஆதமுடைய மக்களே. அந்த ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவரே.

மக்களே! எனது வார்த்தைகளைக் கவனத்துடன் கேளுங்கள், கேட்டு நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். எல்லா முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் சகோதரரே என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒரே சகோதரத்துவத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள். ஒருவருடைய பொருளை அவர் மனப்பூர்வமாகக் கொடுத்தாலன்றி, மற்றொருவர் எடுப்பது (ஹராம்)தடுக்கப்படுகிறது. அநியாயம் செய்வதிலிருந்து கவனத்துடன் விலகிக்கொள்ளுங்கள்.

உங்களுடைய அடிமைகளையும், வேலையாட்களையும் நல்லமுறையில் நடத்துங்கள் நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் உடுத்தும் ஆடைகளைப் போன்றே அவர்களுக்கும் அணிவியுங்கள். அவர்கள் குற்றம் செய்தால் மன்னித்துவிடுங்கள். மன்னிக்க முடியவில்லையானால் அவர்களை விலக்கிவிடுங்கள். அவர்களும் உங்களைப்போன்று இறைவனின் அடியார்களே! அவர்களைக் கொடுமைப்படுத்துவது கூடாது.

உங்களிடம் இருபெரும் பொக்கிஷங்களை விட்டுச் செல்கிறேன். அவைகளை நீங்கள் பின்பற்றும் வரை நீங்கள் வழி தவறமாட்டீர்கள்.

முதலாவது இறைவனது திருவேதமான திருக்குர்ஆன், இரண்டாவது இறைவனின் தூதரான எனது வாழ்க்கை.

மக்களே! செயல்களில் பரிசுத்தமான எண்ணமும், முஸ்லிம்களின் நலனைக்கோரும் விருப்பமும், சமுதாயத்தின் ஒற்றுமையும் உள்ளத்தைப் புனிதமாக்குகின்றன.

**இங்கு வந்திருப்பவர்கள், வராதவர்களுக்கும் என்னுடைய செய்திகளைக் கூறிவிடுங்கள். ஏனெனில் நேரில் கேட்போரைவிடக் கேள்விப்படுவோருக்குச் சிலசமயம் மனதில் நன்கு பதிந்துவிடுவதுண்டு.**

சொற்பொழிவை முடித்த வள்ளல் பெருமானார்(ஸல்) அவர்கள் கூட்டத்தினரை நோக்கிக் கேட்டனர்.

மக்களே! இறைவனது கட்டளைகளை நான் உங்களுக்கு அறிவித்துவிட்டேனா? இறைவன் எனக்களித்த தூதை நிறைவேற்றிவிட்டேனா? இறுதித் தீர்ப்பு நாளில் என்ன கூறுவீர்கள்?

இறைவனது கட்டளைகளை எங்களுக்கு அறிவித்துவிட்டீர்கள் என்றும், இறைவன் தங்களுக்களித்த நபித்துவத்(தூ)தின் கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றிவிட்டீர்கள் என்றும் சாட்சியம் கூறுவோம்.

அந்த மாபெரும் மனிதக் கூட்டத்திலிருந்து ஒருமுகமாக வான்முட்ட எழுந்தது இந்தப் பேரொலி.

இதைக்கேட்ட இறுதித் தூதர்(ஸல்) அவர்கள், வானத்தை நோக்கி தங்களது திருக்கரங்களை உயர்த்தி

**அல்லாஹும்மஷ்ஹது! அல்லாஹும்மஷ்ஹது! அல்லாஹும்மஷ்ஹது!**

இறைவா! நீயே இதற்குச் சாட்சி! இறைவா! நீயே இதற்குச் சாட்சி! இறைவா! நீயே இதற்குச் சாட்சி! என்று மூன்று முறை கூறினார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேருரை உலகமக்கள் அனைவருக்கும் இறுதிநாள் வரை நின்றிலங்கும் இறவா வரம் பெற்ற பேருரையாகும்.

இதைப் பின்பற்றுவோர் ஒருபோதும் வழிதவறவே மாட்டார்கள்! வழிதவறவே மாட்டார்கள்!!

முஸ்லிம் சமுதாயமே! உயிருள்ளவரை இதனை ஏற்றுப் பின்பற்றி நடப்போமாக! அப்போதுதான் நாம் உலக அரங்கில் ஒளிவிட்டுப் பிரகாசிப்போம். உலகமே நம் காலடியில் மண்டியிட்டு நிற்கும். நாம்தான் இறுதி நபியின் உம்மத்தார் என உலகுக்குப் பறைசாற்றுவோம். இறைவன் நமக்கு அருள் பொழிவானாக!

# வாடிக்கையாளர்களை (கஸ்டமர்ஸ்) அதிகப்படுத்துவது எப்படி?
## (சிறந்த கஸ்டமர் சர்வீஸராக வழிகள்)

இன்றைய நவீன காலத்தில், எந்த வியாபாரத்தையும் தொடர்ந்து இலாபகரமாக நடத்துவது என்பது மிகக் கடினமான ஒன்றாக உள்ளது. வாடிக்கையாளர்களை சரியான விதத்தில் திருப்திபடுத்தாத எந்த ஒரு வியாபாரமும் அதிக காலம் நீடிப்பதில்லை.

சிறந்த கஸ்டமர் சர்வீஸராக இருக்க முதலில் நாம், மற்றவர்களிடம் நல்லமுறையில் பணிவாக நடக்கக்கூடியவராக இருக்க வேண்டும், அவ்வாறு அனைவரிடமும் நல்ல முறையில் பணிவாக நடந்து கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. போட்டாபோட்டிகள் நிறைந்த உலகச் சந்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதத்தில் சிறந்த கஸ்டமர் சர்வீஸராக இருக்க என்னென்ன யுக்திகளைக் கையாள வேண்டும் என்பதை இத்தொகுப்பில் பார்ப்போம்.

நீங்கள் எப்பொழுதும் வாடிக்கையாளர்களை வாடிக்கையாளர்களாக பார்க்காமல் அவர்கள் தாங்கள் கடினமாக கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்த பணத்தை பயனுள்ள விதத்தில் செலவழிப்பதற்கு நம் ஸ்தாபனத்திற்கு வந்துள்ளார்கள் என்ற நல்ல எண்ணத்தை மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் எவ்வாறு, எந்த ஒரு பொருளை வாங்கும் முன் பலமுறை சிந்தித்து அது பயனுள்ளதா அல்லது பயனற்றதா என்று பார்த்த பிறகுதான் வாங்குவோமோ, அதைப்போல்தான் நம் வாடிக்கையாளர்களும். எனவே, அவர்களின் தேவையை சரியாக புரிந்து அவர்களிடம் நல்லமுறையில் நடந்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு வாடிக்கையாளர்களிடம் நல்லெண்ணம் கொண்டு நடப்பதால் அவர்களை எளிதில் கவர்ந்துவிடலாம்.

❖முகபாவனையும், கண்கள் தொடர்பும் கஸ்டமர் சர்வீஸில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. கஸ்டமர்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்புகள் கடைசிவரை நிலவ முதல் சந்திப்பு மிக முக்கியமானது. இந்த முதல் சந்திப்பின் முதல் சில வினாடிகளே 55% கவர்தலுக்கு காரணமாகிறது. இந்த 55% எதைப் பொறுத்தது என்றால் முகபாவனையும், கண்களின் தொடர்பும், சொல்லுக்கேற்ற உடலசைவும் உங்களின் ஆடையுமாகும். மீதமுள்ள 45% கவர்தல் உங்களின் பேச்சாகும், அதிலும் 38% உங்கள் குரலின் ஒலி நிர்ணயிக்கிறது. எந்த ஒரு கஸ்டமரும் முதல் சில வினாடிகளில் உங்களிடம் கவரப்பட்டுவிட்டால், மற்ற வியாபாரப் பேச்சுக்கள் மிக எளிதாக அமைந்துவிடும், அதனால் எப்பொழுதும் புன்னகை பூத்த முகமாக அவர்களின் கண்களை பார்த்தவாறு அவர்களை வரவேற்றுப் பேசவும். (கண்களை பார்த்தவாறு என்றால் அவர்களின் முகத்தை உற்று முறைத்தவாறு அல்ல என்பதை கவனத்தில் கொள்ளவும்.)

❖கஸ்டமர்களின் பெயரை தெரிந்துக் கொள்ளுங்கள். சில வினாடி சந்திப்புகளில் அவர்களின் பெயரை தெரிந்துக் கொள்ளுங்கள், இதனால் கஸ்டமர்களுக்கு அவர்களை அறியாமலேயே ஓர் ஈர்ப்பு-தொடர்பு ஏற்படுகிறது. அதே போன்று உரையாடலின் தொடக்கத்திலேயே உங்கள் பெயரையும் தெரியப்படுத்துவது மிகவும் நல்லது. மேலும் தொடர்ச்சியாக வரும் வாடிக்கையாளர்களின் பெயர்களை மட்டுமில்லாமல் அவர்களின் அடுத்தடுத்த சந்திப்பின்போது மற்ற அவசியமான-தேவையான விபரங்களை அறிந்து அதற்கேற்றவாறு அவர்களை திருப்பதிபடுத்தலாம். ***இதன் தொடரை இன்ஷாஅல்லாஹ் அடுத்த இதழில் காண்போம்...***

- **அபூசல்மா.B.E.**

# கர்ப்பப்பை - நீக்கம்

இன்று பெண்களிடையே இந்த கர்ப்பபை நீக்கம் என்பது மிகவும் அதிகமாகக் காணப்பட்டு வருகின்றது. கர்ப்பபையில் ஏற்படும் கோளாறு, கட்டி உருவாகுதல், ஒழுங்கற்ற மாதவிடாய், அதிக இரத்தப் போக்கு மற்றும் இன்னும் பல்வேறு காரணங்களினால், வயிற்றில் ஏற்படும் வலி காரணமாக, மருத்துவர்களிடம் சென்று அவர்களது ஆலோசனைகளைக் கேட்கும் பொழுது, முதலில் பல்வேறு மருந்துகளை எழுதிக் கொடுத்து அத்துடன் ஸ்கேன், இரத்தப் பரிசோதனை இன்னும் என்னென்ன பரிசோதனைகளைச் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்து, ஓரளவுக்கு பணத்தைக் கறந்த பின்பு, இறுதியில் அறுவை சிகிச்சை செய்து கர்ப்பபையை அகற்றுவது நல்லது என்று கையை விரித்து விடுகின்ற காட்சியும், தற்பொழுது இது ஒரு பேஷனாகவும் இருந்து வருகின்றது.

குறைந்த வயதுடைய பெண்களும் இந்த அறுவை சிகிச்சை என்ற சதித் திட்டத்தில் சிக்கி, தங்களது வாழ்க்கையையும், நிம்மதியையும் இழப்பதுமட்டுமில்லாது எதிர்கால சந்ததிகளையும் இழந்துவிடுகின்றார்கள்.

கர்ப்பபை நோய் என்பது, பல்வேறு காரணங்களினால் வருகின்றது. அதிகமாக மாத்திரைகளை, அதுவும் கர்பத்தடை மற்றும் மாதவிடாய் தள்ளிப் போவதற்குண்டான மாத்திரைகள் என்பன போன்ற நாளமில்லாச் சுரப்பிகளின் தன்மையை சிதைக்கக் கூடிய மாத்திரைகளை அதிகமாக எடுத்துக் கொள்வதாலும், அதிகமாக வெள்ளைப் படுதல் மற்றும் அதைக் கவனிக்காது கவனமின்றி இருத்தல், இதற்காக ஆங்கில மருத்துவத்தை அதிகம் நாடுதல் ஆகிய காரணங்களினாலும், மேலும் பெண்கள் அதிகமாக ஆங்கில மருத்துவத்தை நாடி, அந்த மாத்திரை மருந்துகளின் பக்க விளைவுகள் தான், அவர்களின் நாளமில்லாத் தொகுதிகளைத் தாக்கி, இறுதியில் கர்ப்பபை அகற்றுவது வரை வந்து நிற்கின்றது.

அகற்றிய பின்பாவது நிம்மதி இருக்குமா? என்றால் அதுவும் இருக்காது. இதற்குரிய ஒரே வழி மாற்று மருத்துவம் தான்.

அதாவது, யூனானி, ஹோமியோபதி, சித்தா ஆகிய மருத்துவங்களை நாடுவது கர்ப்பபை நோய்களுக்கு நல்லது. இந்த மாற்று வைத்திய சிகிச்சை முறைகள் தற்பொழுது நல்ல பலனைத் தந்து வருகின்றன என்பது மட்டுமல்லாமல், பக்க விளைவுகள் இன்றி, அல்லது குறைவான பக்க விளைவுகளின் காரணமாக உடலுக்கும் ஆரோக்கியம் கிடைப்பதுடன், கர்ப்பபையை அகற்றுவதும் தவிர்க்கப்படுகின்றது.

***- Courtesy : www.tamilislam.com***

# புகையும் நுரையீரல்கள்

*(ஆய்வுக் கட்டுரை)*

“நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள் -நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 4:29)

இஸ்லாத்தில் தற்கொலை செய்து கொள்வது நிரந்தர நரகத்தைத் தேடித்தரும் பாவம் என்பதை அனைவரும் அறிந்ததே. இன்று விஷம் சாப்பிட்டு நாளை இறந்து போனாலும் அதை தற்கொலையாகவே நாம் கருதுவோம். அதேபோல மெதுவாகக் கொல்லக்கூடிய விஷம் (Slow poision) சாப்பிட்டு வாரம், வருடம், 10 வருடம் அல்லது 30 வருடம் சென்று இறந்து போனாலும் இதையும் நாம் தற்கொலையாகவே கருதுவோம். சிகரெட் புகைப்பதால் மனிதன் தன் வாழ்நாளை மிகப்பெரிய அளவில் குறைத்துக் கொள்கின்றான் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மை.

ஆனால் நின்று கொல்லக் கூடிய சிகரெட், இஸ்லாமிய சமுதாயத்திலும் மற்றவர்களிடமும் புத்துணர்வு ஊட்டும் மருந்தாக கருதப்படுவதுதான் விந்தையிலும் விந்தை. எனவே மனித சமுதாயத்தில் குறைந்தது ஒரு நபரையாவது இத்தீய பழக்கத்திலிருந்து விடுபட வைக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிலரின் கருத்து என்னவெனில் சிகரெட் புகைப்பதால் மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்வு ஏற்படும் என்பதும் , வேலையின் பளு தெரியாமல் இருக்கும் என்பதும், வேலையை உற்சாகமாகச் செய்ய உதவும் என்பதுமாகும்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இது ஒரு நவீனக் கலாச்சாரம் என நினைக்கிறார்கள். ஒரு சிகரெட்டை பலர் பகிர்ந்து தங்கள் சகோதரத்துவத்தை(?!) வெளிப்படுத்துகிறார்கள். பசித்தவருக்கு உணவு கொடுக்கிறார்களோ இல்லையோ சிகரெட் தேவைப்படுபவருக்குத் தாராளமாக பாக்கெட்டை நீட்டுகிறார்கள். குறிப்பாக தேர்வு நேரங்களில் அதிகநேரம் கண்விழித்துப் படிக்க புகைப்பழக்கம் ஒரு பக்கபலம் என்று நினைப்பவர்கள் அதிகம். இன்னும் சிலர் காலையில் இது இருந்தால்தான் மற்ற கடமைகள் என்கிறார்கள். இவையெல்லாம் மனதளவில் ஏற்படும் மாயை என்பதில் இவர்களுக்கே சந்தேகமில்லை. இவர்கள் தெரிந்து கொண்டே அழிவின் பக்கம் நகர்ந்து செல்கிறார்கள்.

நான் செயின் ஸ்மோக்கர், எனக்கு நாளொன்றுக்கு இரண்டு பாக்கெட் சிகரெட் வேண்டும் என்று சிலர் பெருமையாகக் கூறுகிறார்கள். இன்னும் சிலரோ நான் நினைத்தால் இப்பழக்கத்தை இன்றே நிறுத்திவிடுவேன், நான் ஒன்றும் இதற்கு அடிமையல்ல! ஏதோ ஓய்வு நேரத்தில் மன ஆறுதலுக்கு பிடிக்கின்றேன் என்கிறார்கள். உண்மையில் இவர்களும் புகைப்பழக்கத்திற்கு அடிமைகளே!

இது போன்ற புகைப்பழக்கத்திற்கு பலர் அடிமையாவதற்கு அடித்தளம் இட்டுக் கொடுத்தவர்கள் யார் என ஆராய்ந்தால் தொலைக்காட்சி மற்றும் திரைப்படத்துறை என்று கூறலாம். புகைபிடிப்பதால் உற்சாகமாய் சண்டையிடும் காட்சிகள், புகைபிடிப்பதைக் கண்டு காதல் வயப்படும் பெண்கள், சோக மற்றும் சந்தோஷ சந்தர்ப்பங்களில் புகைப்பிடித்தல் சம்மந்தப்பட்ட காட்சிகள் போன்றவை சின்னத்திரையும் வெள்ளித்திரையும் தவறாமல் இடைச்செருகல் செய்ததன் விளைவு, இன்று 15 முதல் 19 வயது வரையுள்ளவர்களின் மனதில் புகைப்பழக்கம் ஒரு சிறந்த பழக்கம் என்ற தாக்கத்தை மறைமுகமாக ஏற்படுத்தியுள்ளது.

இதனால் ஆரம்பத்தில் ஜாலிக்காக ஆரம்பிக்கின்ற ஒருவன் காலப்போக்கில் புகைப்பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறான். இப்பழக்கத்திற்காக ஒரு தொகையை தினமும் செலவழிக்கின்றான். இப்பழக்கம் சற்று அதிகமாகி போதைப் பொருட்களைத் தேட ஆரம்பிக்கின்ற சிலரும் உண்டு. சமீப காலங்களாக போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் அதிகமாக கைது செய்யப்படுகின்ற இடம் கல்லூரி வாசல்களாகவே இருக்கின்றன. இனியாவது தணிக்கைத்துறை சினிமாவில் இது போன்ற காட்சிகளையும், விளம்பரங்களையும் தடை செய்து வருங்கால இளைஞர் சமுதாயத்தை ஆரோக்கியமான சமுதாயமாக வளர வழி வகுக்கட்டும்.

இத்தீய புகைபழக்கத்தின் காரணமாக தான்மட்டும் தீமையைத் தேடிக்கொள்ளாமல் “யான் பெற்ற இன்பம்(?!) பெறட்டும் இவ் வையம்” என்பதற்கிணங்க அருகில் இருப்பவருக்கும் அதைப் பகிர்ந்தளிக்கிறார்கள். இதைத் தடுக்க தமிழக அரசு உள்பட பல்வேறு மாநிலங்களில் மருத்துவமனைகள், பேருந்துகள், வணக்கஸ்தலங்கள், ரயில்வே சந்திப்புகள் மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில், புகைத்தால் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என அறிவித்திருக்கிறது. எனினும் இந்த அரசுகள் சிகரெட் விற்பனைக்குத் தடைவிதிக்க முன்வராததின் நோக்கம் என்னவென்று பார்த்தால் அரசு கஜானாவை அதிகமாக நிரப்புவதில் புகையிலைச் சுங்கவரி பெரும்பங்களிப்பதே ஆகும்.

விற்பனைக்குத் தடைவிதித்தால் அதன் உற்பத்தியாளர்களும், விற்பனைதாரர்களும் மற்றும் அதையே தொழிலாக மேற்கொண்டு வாழ்வை நடத்திவரும் மக்களும் சாலைமறியல், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களில் இறங்குகிறார்கள். வீர வசனங்களை தேர்தல் அறிக்கைகளாக வெளியிடும் அரசியல்வாதிகள் உயிர்களை அழிக்கும் இத்தொழிலை முடக்கி ஆக்கப்பூர்வமான பல தொழிற்சாலைகள் திறக்க முன் வருவார்களா?

**கருத்துக்களும் ஆய்வுகளும்**

உலக சுகாதார மையம் (World Health Organization) கருத்தாய்வு ஒன்று கீழ்கண்டவாறு தெரிவிக்கின்றது, தற்போது உலகத்தில் ஆண்டொன்றுக்கு 4 மில்லியன் (40,00,000) மக்கள் இக்கொடிய கேன்ஸர் நோயால் இறக்கின்றனர். இது வருங்காலத்தில் கி.பி. 2025 வாக்கில் 10 மில்லியனாக (1,00,00,000) மாறலாம். இக்கொடிய நோயிற்கு முதல்காரணமே புகைப்பழக்கம் தான் என்கிறது.

2050-ஆம் ஆண்டு வாக்கில் எய்ட்ஸின் மூலம் எவ்வளவு மக்கள் இறக்க நேரிடுமோ அதேபோன்று இந்த கேன்ஸர் மூலமும் இறக்க நேரிடும் என்கிறார்கள். தாய்லாந்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உலக சுகாதார மையம் (World Health Organization) சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிக்கும் விஷயம் தற்போது மட்டும் உலகில் 250 மில்லியனுக்கும் (25,00,00,000) அதிகமாக குழந்தைகள் புகைப்பழக்கத்திற்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உயிர்கொல்லி நோயின் கச்சாப் பொருளாகிய

புகையிலையை இறக்குமதி செய்வதில் ஆசிய நாடுகள் முன்னிலை வகுக்கின்றன.

புகைப்பிடித்தலின் விளைவாக ஏற்படும் இதய நோய்களால் ஆண்டுதோறும் 6,00,000-க்கும் மேலான மக்கள் அமெரிக்காவில் மட்டும் மரணிக்கின்றனர். வருடத்திற்கு 1,50,000 பேர் நுரையீரல் சம்பந்தப்பட்ட புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுகிறார்கள்.

சீனாவில் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று வெளியிட்ட அறிக்கையில், சீனாவில் 70 சதவீதம் ஆண்கள் புகைபிடிப்பவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் பழக்கத்தை மாற்றிக் கொள்ளாதவர்களாகவே உள்ளனர். சீனாவில் சுமார் 30 வயதுகளில் இறப்பவர்களில் மூன்றில் ஒருபகுதியினர் புகைபிடிப்பதால் ஏற்படும் கேன்ஸர் நோய் பாதிக்கப்பட்டு இறப்பவராகவே உள்ளார்.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற மேலை நாடுகளில் புகைபிடிக்கும் ஆண்களைப் போன்று பாதியளவு பெண்களும் இப்பழக்கத்திற்கு அடிமையாகிக் கொண்டிருக்கின்றனர். தாய்லாந்தில் இருக்கும் 80 சதவித புகைபிடிப்பவர்கள் தங்கள் 20 வயதுக்கு முன்பே இப்பழக்கத்தை ஆரம்பித்ததாக சொல்கிறார்கள்.

பெருவாரியான நகரங்களில் புற்றுநோய் மையங்கள் பரவலாகத் தோன்றுவதற்குக் காரணம் கேன்ஸர் பாதிப்புக்குள்ளானவர்கள் அதிகரிப்பதே. யார் ஒருவர் நாளொன்றுக்கு 15 முறைக்கும் மேல் புகைக்கின்றாரோ அவர் பிற்காலத்தில் இதுபோன்ற புற்று நோய் மையத்தில் நோயாளியாக சேர்க்கப்படுவார், என மருத்துவ வட்டாரங்கள் அறிவிக்கின்றன. பி.பி.ஸி செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது, இங்கிலாந்தில் புகைப்பிடிக்கும் 30 முதல் 49 வயதுக்குட்பட்டவர்களில் ஆண்மையிழந்தவர்களின் எண்ணிக்கை 1,20,000. பெரும்பாலானோர் இதை அறியாமலேயே செய்கிறார்கள். மேலும் அதிகமாகப் புகைபிடிப்பவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் ஆரோக்கியமற்ற நிலையிலேயே பிறக்க நேரிடுகின்றன.

*புகைபிடிப்பதால் ஏற்படும் நோய்கள் குறித்தும் வீண்விரயம் குறித்தும் அடுத்த இதழில்......**இன்ஷாஅல்லாஹ்...***

**- அப்துல் மாலிக்**

☆ ☆ ☆ ☆ ☆

*(நபியவர்களை...) முதல் பக்கத் தொடர்ச்சி*

(நபியே!) நீர் கூறும் “நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.

*(அல்-குர்ஆன் 3:31)*

யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் என் வழியை பின்பற்றட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆகவே நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பின் பற்றி அவர்களை நேசித்த கூட்டத்தில் சேருவோம்.

## நபித்தோழர்கள் நபி(ஸல்) அவர்களை எப்படி நேசித்தார்கள்?

கண்ணியத்திற்குரிய நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் வாழ்க்கையை அடிதவறாமல் பின்பற்றினார்கள் என்று சொல்வதைவிட நபி(ஸல்) அவர்களின் அசைவுகளையும் பின்பற்றினார்கள் என்பதுதான் பொருத்தமாகும். அதைக் குறிப்பிடும் சில வரிகள் இதோ.

(1) நீங்கள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களை எப்படி நேசிக்கக்கூடியவர்களாக இருந்தீர்கள்? என அலி(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக நபி(ஸல்) அவர்கள் எங்களின் பொருட்கள் பிள்ளைகள் தந்தை தாய்மார்கள் மற்றும் தாகத்தின் போது குளிர் தண்ணீரை விடவும் எங்களிடம் மிகவும் நேசமுள்ளவர்களாக இருந்தார்கள் என விடை பகர்ந்தார்கள்.

(2) மக்கா முஷ்ரிக்கீன்களுக்கு அடிமையாக இருந்த ஜைத் இப்னு ததினா என்னும் நபித்தோழரை கொலை செய்வதற்காக மக்கா முஷ்ரிக்கீன்கள் ஹரத்தின் எல்லையை விட்டும் வெளியே எடுத்துச் சென்ற போது அபூ சு∴ப்யான் இப்னு ஹர்பு(ரலி) அவர்கள் (அப்போது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வில்லை) அல்லாஹ்வின் மீது ஆணையாக உன்னை உன் குடும்பத்தோடு வாழ விட்டுவிட்டு உன் இடத்தில் முஹம்மதை வைத்து அவரின் கழுத்து துண்டாடப்படுவதை நீ விரும்புவாயா? எனக் கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் என் குடும்பத்தோடு இருந்து நபி(ஸல்) அவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடத்திலேயே நோவினை தரும் ஒரு முள் குத்துவதைக்கூட நான் விரும்பமாட்டேன் எனக் கூறினார்கள். அப்போது அபூ சு∴ப்யான் இப்னு ஹர்பு(ரலி) அவர்கள் கூறினார்கள் முஹம்மதை அவரின் தோழர்கள் நேசிப்பது போன்று மனிதர்களில் யாரும் யாரையும் நேசிப்பதாக நான் பார்க்கவில்லை.

(3) நபி(ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்ற வதந்தி உஹது யுத்தத்தில் பரவிய போது நபித்தோழர்கள் திகைத்துப் போனார்கள். அப்போது ஒரு நபித்தோழி திகைத்துப் போன நிலையில் நபி(ஸல்) அவர்களின் நிலையை அறிந்து கொள்வதற்காக உஹதுப் போர்களத்திற்கு வந்தபோது தன்னுடைய மகன், தந்தை, கணவன் இன்னும் சகோதரர் ஷஹீதாக்கப்பட்ட செய்தியைக் கேள்விப்படுகின்றார்கள். அவர்களில் யாரை முதலில் பார்த்தார்கள் என்பது எனக்குத் தெரியாது அந்த நபித்தோழி ஷஹீதாக்கப்பட்டவர்களை கடந்து செல்லும் போதெல்லாம் இவர் யார் என வினவிய போது இது உமது தந்தை, உமது சகோதரர், உமது கணவர், உமது மகன் என்று சொல்லப்பட்டது. அப்படி சொல்லப்படும் போதெல்லாம் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எங்கே? என்றுதான் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் கொஞ்சம் முன்னால் இருக்கின்றார்கள் என நபித் தோழர்கள் கூறினார்கள். நபி(ஸல்) அவர்களைப் பார்த்த போது அன்னாரின் ஆடையின் ஓரத்தைப் பிடித்துவிட்டு பின்பு கூறினார்கள், அல்லாஹ்வின் தூதரே! என் தாயும், தந்தையும் அற்பணமாகட்டும் நீங்கள் நலமடைந்து விட்டால் நான் எந்த அழிவைப்பற்றியும் கவலைப்படமாட்டேன் எனக்கூறினார்கள்.

*(அறிவிப்பவர் : அனஸ் (ரலி) ஆதாரம்: தப்ராணி)*

ஒரு அறிவிப்பில்: உங்களின் நலத்திற்குப் பின் எல்லாக் கஷ்டங்களும் மிக இலேசானதே என்றார்கள். (ஷீறா இப்னு ஹிஷாம்)

நபித்தோழர்களும், நபித்தோழிகளும் உண்மையில் நபியவர்களை நேசித்தார்கள் என்பதற்கு இன்னும் இது போன்ற எத்தனையோ வரலாற்றுச் சம்பவங்களைக் கூறலாம். நபி(ஸல்) அவர்கள் ஏவியதையும் தடுத்ததையும் நபித்தோழர்கள் எடுத்தும், தடுத்தும் நடந்தார்கள் என்பது

மட்டுமல்ல. தூதருக்காக தன் உயிரையே அற்பணித்தார்கள். அன்னாரின் விருப்பத்தை தன் விருப்பமாக்கினார்கள். இப்படித்தான் நபி(ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும்.

இது அல்லாமல் ரபியுல்-அவ்வல் மாதத்தில் நபியவர்கள் பேரில் மௌலிது படித்துவிட்டு அல்லது மீலாது விழா நடத்திவிட்டு நாம் நபி(ஸல்) அவர்களை புகழ்ந்து விட்டோம் என்பது போலி நேசமாகும். இவர்களில் அதிகமானவர்கள் நபி(ஸல்) அவர்களின் சுன்னத்திலிருந்து வெகு தூரமானவர்கள். மௌலிது படிப்பதும், மீலாது விழா நடத்துவதும் நபி(ஸல்) அவர்களை நேசிப்பதாக இருந்தால் அதை நிச்சயமாக நபித்தோழர்கள் செய்திருப்பார்கள். ஆனால் நபித்தோழர்களோ, தாபியீன்களோ தப்உத்தாபியீன்களோ, இமாம்களோ இதைச் செய்யவில்லை. அதாவது சிறப்பிற்குரிய மூன்று நூற்றாண்டிலும் இது நடைபெறவில்லை. இதை முதலில் அரங்கேற்றியவர்கள் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த ஷீஆக்களைச் சேர்ந்த ∴பாத்திமியின்கள் என்பவர்கள்தான்! இஸ்லாத்தில் இல்லாதவைகளை இஸ்லாத்தினுள் நுழைய வைக்க வேண்டும் என்பதற்காக இதைச் செய்தார்கள். ஆறாம் நூற்றாண்டின் கடைசி அல்லது ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இர்பில் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர் முள∴ப்பர் அபூ ஸயீத் கோக்பூரி என்பவர் இவர்களுக்குப் பின் மக்கள் மத்தியில் இதை வெளிப்படுத்தினார்.

இப்னு கதீர்(ரஹ்) அவர்கள் "அல்பிதாயா வன்னிஹாயா" என்னும் வரலாற்றுக் குறிப்பில் "அபூ ஸயீத் கோக்பூரியின்" வரலாற்றைக்கூறும் போது – ரபியுல்-அவ்வல் மாதத்தில் மௌலிது ஓதி மாபெரும் மீலாதுவிழாக் கொண்டாடுவார். இவர் ஏற்பாடு செய்யும் மௌலிது விருந்துபச்சாரத்தில் சுடப்பட்ட ஐய்யாயிரம் ஆடுகளும், பத்தாயிரம் கோழிகளும், ஒரு லட்சம் தயிர் கோப்பைகளும், முப்பது ஆயிரம் ஹல்வாத்தட்டுக்களும் என்று இவர் ஏற்பாடு செய்த சில மௌலிது விருந்துபச்சாரத்தில் கலந்து கொண்ட சிலர் கூறினார்கள். இன்னும் ளுஹர் நேரத்திலிருந்து ∴பஜ்ர் நேரம் வரை ஸு∴பியாக்கள் பாட்டுப்பாடுவதற்காக ஒலிபெருக்கிகளை ஏற்பாடு செய்து அவர்களுடன் சேர்ந்து இவரும் நடனமாடுவார். *(அல்பிதாயா வன்னிஹாயா)*

**அன்புள்ள சகோதர, சகோதரிகளே!**

இதுதான் மீலாது விழாவின் லட்சணம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இதுதான் நபி(ஸல்) அவர்களை நேசிக்கும் முறையா? இல்லை! இல்லவே இல்லை!! நபி(ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப் பின்பற்றுவதுதான் அவர்களை நேசிப்பதற்கு அடையாளமாகும்.

## "மீலாது விழா"
## இஸ்லாத்தில் அனுமதி உண்டா?

பின் வரும் ஆதாரங்கள் மீலாது விழா கொண்டாடுவது இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட காரியமாகும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

மீலாது விழா கொண்டாடுவது நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழியல்ல. யார் நபி(ஸல்) அவர்கள் காட்டித்தராத ஒன்றைச் மார்க்கமாகச் செய்கின்றாரோ அது இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத பித்அத் என்ற மாபெரும் குற்றமாகும்.

யார் எங்களின் இந்தக் காரியத்தில் (இஸ்லாத்தில்)இல்லாத ஒன்றை செய்கின்றாரோ அது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

அது கிறிஸ்தவர்களின் செயலுக்கு ஒப்பாகும். அவர்கள்தான் நபி ஈஸா(அலை) அவர்களுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவார்கள். அவர்களைப் பின்பற்றுவது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவைகளாகும்.

ஒரு கூட்டத்துக்கு ஒப்பானவர் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அஹ்மத்)*

ஒரு வாதத்திற்கு பிறந்த நாள் கொண்டாடுவது இஸ்லாத்தில் ஆகுமென்றிருந்தால்கூட ரபியுல்-அவ்வல் மாதத்தின் பிறை 12ல் மீலாது விழா கொண்டாடுவது பொருத்தமானதல்ல. காரணம் நபி(ஸல்) அவர்கள் பிறை 12ல் பிறந்தார்களா என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் எதுவும் இல்லை. வரலாற்று ஆசிரியர்கள் இதுபற்றி பல கருத்துக்களை குறிப்பிடுகின்றார்கள். அதில் ஒரு கருத்துத்தான் நபி(ஸல்) அவர்கள் பிறை 12ல் பிறந்தார்கள் என்பது. ஆனால் நபி(ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 11ம் ஆண்டு, ரபியுல்-அவ்வல் மாதம், பிறை 12ல் மரணமானார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இதில் யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. நபி(ஸல்) அவர்கள் பிறை 12ல் மரணித்தார்கள் என்பது தெளிவான பின்பும் அந்த நாளை கொண்டாடுவது நபி(ஸல்) அவர்களை நேசிப்பவர்களின் அடையாளமாகுமா? சிந்தியுங்கள்!!

ஒரு வேளை நபி(ஸல்) அவர்கள் பிறந்த தேதியும், இறந்த தேதியும் ஒன்றாக இருந்தால் கூட அன்றைய நாளில் மீலாது விழா கொண்டாடுவதற்கு அனுமதியில்லை. காரணம் பிறந்த நாளை நினைத்து சந்தோஷம் கொண்டாடுவதை விட இறந்த நாளை நினைத்து துக்கம் அனுஷ்டிப்பதுதான் ஒரு நேசனின் அடையாளமாகும். (பிறந்த நாளை நினைத்து பிறந்த நாள் வாழ்த்துக் கொண்டாடுவதற்கோ, இறந்த நாளை வைத்து அஞ்சலி செலுத்துவதற்கோ இஸ்லாத்தில் அனுமதி இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது). ஆகவே! மீலாது விழாக் கொண்டாடுவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல என்பது ஆதாரத்தின் அடிப்படையிலும் அறிவு ரீதியிலும் தெளிவாகி விட்டது அல்ஹம்துலில்லாஹ்!

நபி(ஸல்) அவர்களை எல்லை கடந்து புகழ்வது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டதாகும்.

வேதத்தையுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்கத்தில் அளவு கடந்து செல்லாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள் நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய ஈஸா அல்மஸீஹ் அல்லாஹ்வின் தூதர் தான் இன்னும் ("குன்" ஆகுக என்ற) அல்லாஹ்வின் வாக்காக (அதனால் உண்டானவராகவும்) இருக்கின்றார் அதை அவன் மர்யமின்பால் போட்டான் (எனவே) அவரும் அவனிடமிருந்து (வந்த) ஓர் ஆன்மா தான் ஆகவே, அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொள்ளுங்கள். (அல்-குர்ஆன் : 4:171)

மர்யமின் மகன் ஈஸா(அலை) அவர்களை கிறிஸ்தவர்கள் எல்லை கடந்து உயர்த்தியது போன்று என்னையும் நீங்கள் எல்லை கடந்து உயர்த்தாதீர்கள். நான் ஓர் அடியார்தான். ஆகவே (என்னை) அல்லாஹ்வின் அடியார் என்றும் அவனின் தூதர் என்றும் கூறுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

அனபிற்குரியவர்களே நபி(ஸல்) அவர்களை நேசிப்பது என்பது அவர் வழி நடப்பதே. அல்லாஹ் நம் அனைவருக்கும் அந்த நற்பேறை நல்கிடுவானாக! -ஆமீன்.

# செல் ஃபோன்

(ஒரு கழுகுப் பார்வை)

தொலைத்தொடர்பு சாதனங்கள் பல்கிப் பெருகிக் கொண்டிருப்பது நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகின்றது. எங்கிருந்தும், எப்போதும், யாரிடமும் தொடர்புகொள்ளலாம் என்கிற அளவிற்குச் செல் ∴போன்கள் நமக்குக் காலத்தைச் சுருக்கித் தந்துவிட்டன. தொலைபேசி(Land Line) இணைப்புகளை முழுமையாகப் பயன்படுத்தாமலேயே ஒரு தலைமுறை சென்றுகொண்டிருக்கையில் இன்று பிறந்த குழந்தைகள் கூட செல் ∴போன்களில் பேசத் தொடங்கிவிட்டன. உங்கள் பேர் என்ன? என்று கேட்பதற்குப் பதில் உங்கள் செல் நெம்பரைச் சொல்லுங்கள் என்று கேட்கும் அளவிற்கு இன்று காலம் மாறிவிட்டது.

2004-டிசம்பர் மாதம் எடுத்த கணக்கெடுக்கின்படி இந்தியாவில் செல் ∴போன் பயன்படுத்துவோர்கள் 4.74 கோடி பேர். இது கடந்த 2003ஐக் காட்டிலும் 68% அதிகம். (நன்றி : தினமணி) இந்த அளவிற்குச் செல் ∴போன் பயன்படுத்துவோர் எண்ணிக்கை வேகமாக வளர்ந்து வருகிறது.

இப்போதெல்லாம் செல் ∴போன் திருடர்கள் பெருகிவிட்டார்கள். சாலையோரம் பேசிக் கொண்டிருக்கும் போதே பிடுங்கிச் சென்று விட்டார்கள் என்று ஒரு பெங்காலி நண்பருக்கு நேர்ந்த சோகக்கதையைச் சொல்லி விழிப்பூட்டும் நண்பர்.., குளியலறையில் கேட்கும் ஹலோ சப்தங்கள், செல் ∴போனை கழிவறையில் தவறவிட்டு பல்வேறு பழுதுபார்க்கும் கடைகள் ஏறிஇறங்கி அதன் ஈமச்சடங்குகளை முடிந்து சோகமாய் அமர்ந்திருக்கும் என் தொழிற்சாலைத் தோழன். செல் ∴போன் வாங்க கடைகளில் மொய்ந்து கொண்டிருக்கும் இளைஞர் கூட்டம்.

“சொல் இல்லார்க்கு உய்வுண்டாம் - உய்வில்லை
Cell இல்லாதவர்க்கு”

என்று எனது துபாய் தோழர் செல் ∴போனில் உதிர்த்த நகைச்சுவை… என்று நம் வாழ்க்கையின் நிகழ்வுகள் ஏதாவது ஒரு வகையில் செல் ∴போன்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவே தோன்றுகிறது.

“செல்” வைத்துக் கொள்வது அவசியமா? என்று சிலரிடம் கேட்டபோது, ஆம்! ஹாஜிகளுக்குச் சேவை செய்ய! தவறியவர்களை கண்டெடுக்க! புதிய முகவரிகளைக் கண்டுபிடிக்க! உறவுகளுடன் தொடர்பு கொள்ள!.. என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது, என்றாலும் செல் ∴போன்கள் முழுக்க முழுக்கப் பலன்களை மட்டுமே கொண்டுள்ளது அல்ல! என்ற குற்றச் சாட்டையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. செல் ∴போன் பற்றிய நன்மைகளை நாம் நிறையவே அறிந்து வைத்திருக்கின்றோம். ஆகவே அதில் உள்ள தவறான உபயோகங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஊட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பல பேர் “செல்” வாங்கிவிடுகின்றனர். அதை முறையாகப் பயன்படுத்தத் தெரியவில்லை. குறிப்பாக ரிங் டோன் (Ring Tone)ஐ அலறவிடுகின்றனர். இரவெல்லாம் (Night Shift) வேலை பார்த்துவிட்டு அயர்ந்து தூங்கும் அறைத்தோழர்களை Fire Alarm போல செல் ∴போனை அலறவிட்டு எழுப்பக்கூடிய சூழல்.

பள்ளிவாசல்கள், கல்விச்சாலைகள், மருத்துவமனைகள் என்று இடவேறுபாடு பாராமல் செல் ∴போன் சப்தங்களை அலறவிடுவதை தவிர்க்க வேண்டும். இடத்திற்குத் தகுந்த முறையில் சப்தங்களை சரிசெய்ய வேண்டும். இந்த நேரத்தில் பள்ளிவாயில்களில் நடக்கும் செல் ∴போன் இடையூறுகளை சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது.

இமாம் தக்பீர் கட்டியவுடனேயே இந்த செல் ∴போன் ஆலாபனைகள் ஆரம்பமாகிவிடுகின்றன. சிலபேர்கள் இமாமத் செய்யும்போதுகூட செல் ∴போன் கதற தொழுகையில் நெழிய வேண்டிய சூழல்.

Ring Tone என்று பல சப்தங்கள் இருந்தாலும் பெரும்பாலானோர் விரும்புவது சங்கீதத்தைத்தான். குறிப்பாக சினிமா மெட்டுக்களை(தான்) Ring Tone ஆக உபயோகிக்கின்றனர். இதை முஸ்லிம்களும் ஏன் விபரம் அறிந்தவர்களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல என்ற அளவுக்கு நிலைமை போய்விட்டது. காலணிகளை கழற்றிவிட்டு உள்ளே வரவும் என்று எழுதுவது போன்று செல் ∴போன்களை அமர்த்திவிட்டு உள்ளே வரவும், என்று பள்ளிவாயில்களில் அறிவிப்புப் பலகை வைக்கும் நிலைமை!

தொழுகை என்பது இறைவனுடன் அடியான் உரையாடுவது. பள்ளிவாயில்கள் இறைவனை நினைவுகூறும் இடம் என்பதை எல்லாம் ஏனோ இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

**“என்னை நினைவுகூறுவதற்காக தொழுகையை நிறைவேற்றுவீராக!”** *(அல்-குர்அன் : 20:14)*

என்று இறைவன் கூற இவர்கள் இடையூறு செய்பவர்களாக உருவானது ஏன்? இதேபோல் மார்க்கச் சொற்பொழிவு நடக்கும் இடங்களில் கூட பேச்சாளரை மிஞ்சும் வகையில் இடையிடையே ஹலோ! சப்தங்களையும், சம்பாஷனைகளையும் கேட்க முடிகிறது. மலக்குகள் சூழ்ந்துள்ள சபையல்லவா! இடையூறு தரும் இந்த இசைத் தொல்லைகள் இறைவனைக் கோபமூட்டுமல்லவா!

அன்புக்குரியவர்களே! இத்தகைய செயல்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். முதலாளியுடன் பேசும்போது அமர்த்திவைக்க ஆர்வம் காட்டும் “செல்”களை இறைவனுடன் உரையாடும்போது அலறவிடுவது முறைதானா? சிந்தியுங்கள்!

இப்போதெல்லாம் மிகச்சிறிய “செல்” வைத்துக்கொள்வது ∴பேஷன் ஆகிவிட்டது. என்னுடைய செல் தான் மிகச் சிறியது, என்னிடத்தில் கலர் ஸ்கிரீன் செல் உள்ளது, என்னிடத்தில் கேமரா செல் உள்ளது, என்னிடத்தில் வீடியோ கேமரா செல் உள்ளது என்று பெருமை பாராட்டுவதே சிலரின் வழக்கமாகிவிட்டது. சாதாரணமாக மிஸ் கால்(Missed Call) கொடுப்பதற்கும், நேரம் பார்ப்பதற்கும் மட்டுமே “செல்”ஐ உபயோகப்படுத்தும் எத்தனையோ நண்பர்கள். ஆயிரக் கணக்கில் பணம் செலவழித்து செல் ∴போன் வாங்குவதைப் பார்க்கிறோம். மிகக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யும் ஏழைகள் கூட எங்கே நம்மை வறுமைக்கோட்டிற்கு கீழே சேர்த்து விடுவார்களோ?! எனப்பயந்து தன்மானப் பிரச்சனையாகக் கருதி செல் ∴போன் வாங்கிவிடுகின்றனர். இன்னும் சிலபேரிடம் வர்ண செல்கள், வகைவகையாக (ஒன்றுக்கும் மேற்பட்ட) செல்களைக் காணமுடிகிறது.

இனிவரும் காலங்களில் ஒரே ஒரு செல் ∴போன் (Cell Phone) வைத்திருப்பவர்களை ஒரு செல் (Cell) உயிரினம் என்று அழைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! ஒரு சாதாரண தொடர்பு சாதனத்துக்கு பல்லாயிரம் செலவழிக்க வேண்டுமா? வார்த்தைகளை புரியவைக்க வர்ணங்கள் அவசியம்தானா? இது ஒரு பெருமையின் சாயலைப்

பிரகடனப்படுத்துவதே அன்றி வேறல்ல. தமது தேவைகளுக்கேற்றவாறு செல் ∴போன் வாங்கிக் கொள்வதே சிறந்தது.

***யாரின் உள்ளத்தில் ஓர் அணுஅளவு பெருமையுள்ளதோ, அவர் சுவர்க்கதத்தில் நுழைய மாட்டார் என நபி(ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊது(ரலி), ஆதாரம் : முஸ்லிம்))***

சிலர் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டு (Bill) பணம் கட்ட கஷ்டப்படுவதும், கட்டாமல் தலைமறைவானதும் கூட நடக்கின்றது. தலைநகர் சென்னையில் மட்டும் பணம் கட்டாத 550 பேர் மீது BSNL நிறுவனம் வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த 550 பேரும் 25,000 ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்தவர்கள். இதுபோல் 2 கோடி ரூபாய் சென்னையில் மட்டும் பாக்கி, இது தேவைதானா? (தினமணி-அக்டோபர் 26, 2005)

அடுத்ததாக SMS எனப்படும் "குறுந்தகவல் சேவை" ஒரு குறிப்பிடத்தக்கது. செல்லில் பேசி பணத்தை விரயம் செய்யாமல் சுருக்கமாக தகவல்களை பரிமாற்றிக்கொள்ள இந்த SMS வகை செய்கிறது. தொழுகை, நோன்பு போன்றவை சம்மந்தமான நபி மொழிகளை அனுப்பி மக்களுக்கு த∴வா செய்யக்கூட இந்த அறிய SMSஐ பயன்படுத்தலாம். ஆனால் இன்று இந்த SMS பயன்படுத்துவதெல்லாம் முறை தவறிய செயல்களுக்குத்தான்.

என்னுடன் பணிபுரியும் தமிழ்ச் சகோதரருக்கு வந்த ஆங்கில SMS, "குறுந்தகவல்" தோழி தேவையென்றால் தொடர்புகொள்ளவும் இப்படிக்கு லாரா (Lara). நல்லவேளை அவருக்கு ஆங்கிலம் தெரியாது. நான் அந்தத் தகவலை அழித்துவிட்டேன். இது ஒரு மாதிரிதான். இதைப்போன்று பல்வேறு தகவல்கள் ஆண், பெண் பேதமின்றி பரிமாற்றிக் கொண்டிருக்கின்றனர். சமீபத்திய காதலர் தினக் களியாட்டங்களில் கூட இந்த SMS பங்கு அதிகம் என்றால் அது மிகையாகாது. நல்ல குடும்பப் பெண்களுக்கும், தொழுகையாளிகளுக்கும் கூட சில விஷமிகள் கெட்ட படங்களை அனுப்பி விடுகின்றனர். இதனால்தான் கிரைம் பிரான்ச் (Crime Branch) காலம் போய் சைபர் கிரைம் பிரான்ச் (Cyber Crime Branch) குற்றப்பிரிவுகள் காவல்துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் சென்னையில் வசிக்கும் ஒரு குடும்பப் பெண்ணுக்கு தினமும் வரும் நிர்வாணப்படங்களை தொடர்ந்து Cyber Crime Police வட பழனியைச் சேர்ந்த கண்ணன் என்ற வாலிபனை கைது செய்தனர். அவர் கிரெடிட் கார்டுகளுக்கு பணம் வசூலிப்பவர். அப்போது தனிமையில் இருக்கும் பெண்களை நோட்டமிட்டு செல் நெம்பர் வாங்கி பின் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கேமரா செல் ∴போன்கள் மார்க்கெட்டில் வந்த புதிதில் அதன் விபரீதம் புரியாமல் பலர் வாங்கினார்கள். பாஸி.காம் என்ற இணையதளத்தின் உரிமையாளர் அஸ்வின் பஜாஜ் என்பவர் கைது செய்யப்படும்வரை அரசாங்கமும் ஏதும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. புது டில்லியில் ஒரு மாணவனும், மாணவியும் பள்ளியறையில்(!?) ஏடாகூடாமாக இருந்ததை சகமாணவர்கள் வீடியோ கேமரா செல்'லில் கிளிக் (Video Clip) செய்து சேவை(?) நோக்கில் பலருக்கும் இதை அனுப்ப இது பாஸி.காம் என்ற இணையத்தளம் உபயோகிப்போருக்கு எட்டிவிட்டது. உலகம் முழுவதும் இணையதளம் உபயோகிப்போருக்கு விருந்தளித்தபின்தான் இது சர்ச்சையானது. மாணவி பெரிய இடத்து பெண் என்பதால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டு, இணையதள உரிமையாளர் அஸ்வின் பஜாஜ் கைது செய்யப்பட்டார். இந்த சம்பவம் நடந்தபின்தான் அரசாங்கமும், கல்வி நிறுவனங்களும் விழித்துக்கொண்டன. பல மாநிலங்களில் கல்லூரிக்குள் கேமரா மொபைல் கொண்டு வருவது தடை செய்தன. முட்டிய பின் குனிவதுதான் நம் மக்களின் கலாச்சாரம் போலும். மாணவ மாணவியற்கு இது ஒரு அதிர்ச்சி என்றுதான் நினைக்கத் தோன்றுகின்றது. இது பற்றி கல்லூரி வளாகத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்த எலெக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் பயிலும் ராம்குமார் கூறுகிறார்... இந்த உத்தரவை முன்பே பிறப்பித்திருக்க வேண்டும். ஏதாவது ஒரு அசம்பாவிதம் நடந்தபின்தான் நடவடிக்கை எடுப்பது வழமையாகிவிட்டது. யார் வேண்டுமானாலும் துப்பாக்கி வைத்துக்கொள்ளலாம் என்பது எப்படி ஆபத்தானதோ அதேபோன்றுதான் கேமரா செல் ∴போன் வைத்துக்கொள்வதும். முதலில் இது பள்ளிக்கூடங்களிலே தடைசெய்யவேண்டும். *(தினமணி)*

இது மட்டுமல்ல, பொது இடங்களில் செல்லும் குடும்பப் பெண்களின் இடை போன்ற பகுதிகளை அவர்களுக்குத் தெரியாமல் படம் எடுப்பதுகூட நடக்கின்றது. இவ்வளவு அசம்பாவிதங்கள் போதாதென்று சினிமாத்துறையும் தனது திரைப்படங்களை கேமரா செல் மூலம் ரிலீஸ் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

"சீனாவில் SMS மூலம் தொடராக வெளியான அவுட் சைடு தி ∴போர்ட்ரஸ் பீ ஸீஜ்டு (Out Side the Portress Seized) என்ற நாவல் திரைப்படமாக்கப்பட்டு இதை செல் ∴போன் மூலமே 30-40 தொடராக காட்டப்படும். திருமணமானவர்கள் புரியும் தவறான உறவுகளை சித்தரிக்கிறது இத்திரைப்படம்."

தேவைதானா இந்த கேமரா செல்∴போன்கள்.' செல்∴போன்' என்ற இந்த அரிய சாதனம் மக்களை எப்படியெல்லாம் பாதிக்கிறது. திரையரங்குகளில் பலர் முன்னிலையில் காண வெட்கப்படுபவர்கள் கூட செல் ∴போன் உதவியால் தனிமையில் ஆபாச காட்சிகளையும், செய்திகளையும் பார்க்கலாம், கேட்கலாம். எவ்வளவு பெரிய விபரீதத்திற்கான வித்துக்கள் தூவப்பட்டுள்ளன.

**இறைவன் தன் மாமறையில் "இறுதியாக (நரகமாகிய) அதன்பால் அவர்கள் வந்து சேர்ந்துவிடுவார்களாயின் (பாவம்) செய்த அவர்களுக்கு விரோதமாக அவர்களது செவிப்புலனும், பார்வைகளும், தோலும் அவர்கள் செய்து கொண்டிருந்ததைப் பற்றி சாட்சி சொல்லும். (அல்-குர்ஆன் : 41:20)**

எனவே அன்புள்ளம் கொண்டவர்களே! செல் ∴போன் என்பது இறைவன் நமக்களித்த இந்த நூற்றாண்டின் அருட்கொடை எனலாம். அதைப் பயன்படுத்தும் முறையில்தான் அது ஹராமா? ஹலாலா? என தீர்மானிக்க முடியும். நிச்சயமாக இதை தவறாக பயன்படுத்தினால் மறுமை மன்றத்தில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவோம்.

*நபி(ஸல்) அவர்களும், அபூபக்கர்(ரலி), உமர்(ரலி) ஆகியோர் அபுல் ஹைதம் பின் அத்தீஹான்(ரலி) அவர்களின் வீட்டில் விருந்துண்டபின் நபி(ஸல்) அவர்கள் கூறிய வாசகம் இங்கே* நினைவுகூற ஏற்றம். *"நிச்சயமாக அல்லாஹ்வின்மீது ஆணையாக இந்த அருட்கொடை பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள்" (ஹதீஸின் சுருக்கம், அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி), ஆதாரம் : முஸ்லிம்))*

சாதாரண பேரிச்சம் பழத்தினை உணவாக உட்கொண்டதற்கே (அருட்கொடையாக) விசாரணை உண்டென்றால்.. செல் ∴போன் என்ற இந்த அரிய தொடர்புச்சாதனம் பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை!

எனவே! பெருமைக்காக அனாச்சாரங்களில் பயன்படுத்துவது, தவறான வழியில் பயன்படுத்துவது, Cell-லில் தேவைக்கதிகமாகப் பேசி வீண்விரயம் செய்வது போன்றவற்றைத் தவிர்ப்போம். செல் ∴போன் இறைவனின் அருட்கொடை என்பதை கருத்தில் கொண்டு முறையாகப் பயன்படுத்துவோம்!

## செல் ∴போன் பயன்படுத்துவோர் கவனிக்க வேண்டியவை

☞ Ring Tone-களில் இசையை முழுமையாகத் தவிர்க்கவேண்டும். சாதாரணமான Ring Tone அல்லது மணியோசை போன்றவற்றை பயன்படுத்தலாம்

☞ சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் Ring Tone சப்தத்தை வைத்துக் கொள்ளவேண்டும். தொழுகை நடக்கும் இடம், மார்க்கச் சொற்பொழிவு அரங்கங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றில் அதிர்வூட்டலை (Vibration Mode) பயன்படுத்தலாம். அமர்த்திவிடுவது சாலச்சிறந்தது.

☞எதிர் முனையில் நாம் தொடர்பு கொள்ளக்கூடிய நபர் துக்கம் அல்லது முக்கியமான சந்திப்பில் (Meeting) இருக்கலாம், அல்லது வாகனத்தை ஓட்டிக்கொண்டோ அல்லது பயணத்திலோ இருக்கலாம். முன் அனுமதி பெறுவது நல்லது.

☞நாம் Dial செய்யும்முன் தொழுகைக்குரிய நேரமா என்பதைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

☞பேசும் போது பொருளாதார வீண்விரயம் கருதி சுருக்கமாகப் பேசவேண்டும், சிலர் பத்து நிமிடம் பேசினால் 5 நிமிடம் சிரிப்பில் கழிந்துவிடுகிறது.

☞எதிர் முனையில் நாம் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் இல்லாமல் அவரது மனைவி மற்றும் பெண்கள் எடுக்கும் பட்சத்தில் நீட்டாமல் சுருக்கமாகச் செய்தியைக் கூறி முடிக்கவேண்டும்.

☞பிறர் செல் ∴ போன் எண்களை வாங்கும் போதும், பிறருக்கு நாம் சொல்லும் போதும் சரியாகக் கொடுக்க வேண்டும். டயல் செய்யும் முன் டயல் செய்யும் எண்ணைச் சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

☞வாகனம் ஓட்டும்போது செல் பேசிகளில் பேசுவது அல்லது ரிசீவ் செய்வதைத் தவிர்க்கவும்.

☞நிர்பந்தம் எற்படாவிட்டால் தவிர நமது செல் பேசிகளை மற்றவர்கள் சுதந்திரமாக பாவிக்க அனுமதிக்க வேண்டாம். அதேபோல் நாம் மற்றவர்கள் செல் ∴போன்களை உபயோகிக்க நேர்ந்தால் மென்மையாக உபயோகிப்பது நல்லது.

☞அறிமுகமில்லாதவர்களிடம் தங்கள் செல் ∴போனில் பேச அனுமதிக்க வேண்டாம். செல் பேசிக்கொண்டே அவர்கள் ஓடிப்போய்விடுவது... அல்லது நமது தனிப்பட்ட எண்களைக் குறித்துக் கொண்டு தவறான முறையில் பயன்படுத்தவும் வாய்ப்புள்ளது.

☞பேசும் போது நடுத்தரமான குரலில் பேசுவது நல்லது. அதிக சப்தமாக பேசினால் நம் பேச்சை மற்றவர்கள் கேட்கவும், மற்றவர்களுக்கு இடைஞ்சலாகவும் இருக்கும்.

☞உரையாடலுக்கு முன்னும், பின்னும் சலாம் சொல்ல மறவாதீர்கள்.

**அ.மைந்தன்**

☆ ☆ ☆ ☆ ☆

# கனவுகள்

நுபுவத்தில் நற்செய்தி கூறக் கூடியவைகளைத் தவிர வேறெதுவும் எஞ்சியிருக்கவில்லை என நபி(ஸல்) கூறினார்கள். அப்போது நற்செய்தி கூறக் கூடியவைகள் என்றால் என்ன? என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நல்ல கனவுகள் என நபி(ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.

*(அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி) ஆதாரம் : புகாரி)*

நல்ல கனவுகள் அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் தீய கனவுகள் ஷைத்தானின் புறத்திலிருந்தும் ஏற்படுகின்றன. உங்களில் எவரேனும் தான் விரும்பாத கனவைக் கண்டால் இடப் புறம் மூன்று முறை துப்பிவிட்டு அல்லாஹ்விடம் அதன் தீங்கை விட்டும் பாதுகாப்புத் தேடட்டும். நிச்சயமாக அதனால் அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூகதாதா(ரலி), ஆதாரம்: புகாரி, முஸ்லிம், திர்மிதி))

காணாத (அல்லது கண்ட) கனவு விஷயத்தில் யார் பொய் சொல்கிறாரோ அவர் (மறுமையில்) இரண்டு கோதுமைகளை சேர்த்துக் கட்டுமாறு வற்புறுத்தப்படுவார். அவரால் கட்ட முடியாது என நபி(ஸல்) கூறினார்கள்.

*(அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), ஆதாரம் : புகாரி, திர்மிதி)*

உங்களில் ஒருவர் தனக்கு விருப்பமான கனவினைக் கண்டால் நிச்சயமாக அது இறைவன் புறத்திலிருந்து வந்திருக்கின்றது. அதற்காக அவர் இறைவனைப் புகழ்ந்து அக்கனவை மற்றவரிடம் கூறட்டும். தான் விரும்பாத ஒரு கனவைக் கண்டால் நிச்சயமாக அது ஷைத்தான் புறத்திலிருந்து ஏற்பட்டிருக்கின்றது. அதன் தீங்கை விட்டும் இறைவனிடம் அவர் பாதுகாப்புத் தேடட்டும். அக்கனவை யாரிடமும் கூற வேண்டாம். நிச்சயமாக அதனால் அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(அறிவிப்பவர் : அபூ ஸயீத் (ரலி), ஆதாரம் : புகாரி))*

# வவ்வால் (Bat)

(அல்லாஹ்வின் அதிசயப் படைப்புகள்)

உலகத்தில் இறைவனால் படைக்கப்பட்டுள்ள பாலூட்டிகளில் பெரும்பாலான இனங்கள் அழிந்துவிட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இன்றளவிலும் லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய மிகப் பழமையான புதைபொருள் எலும்புக்கூடுகளை கண்டுபிடிக்கின்றனர். கிட்டதட்ட ஒரு லட்சம் பாலூட்டிகள் இந்த உலகில் இருந்ததாகவும் அவற்றில் பெரும்பகுதி அழிந்துவிட்டதாகவும் தற்போது 4000 பாலூட்டிகள் மாத்திரமே உள்ளதாகவும் கூறுகின்றார்கள். மேலும் இவற்றின் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைந்து வருவதாகவும் இன்னும் ஒன்றிரண்டு தலைமுறைக்குப் பிறகு பல உயிரினங்களை உயிரியல் கண்காட்சிகளில் மாத்திரமே காணக்கூடிய நிலை ஏற்படும் என்றும் திட்டவட்டமாக கூறுகின்றார்கள். ஏனெனில் பல விலங்குகளின் நிலை விரல் விட்டு எண்ணக்கூடிய நிலையில் இருப்பதே இதற்குச் சான்றாகும். இந்த எண்ணிக்கையில் உள்ள பாலூட்டிகளில் ஏறக்குறைய நான்கில் ஒருபகுதி இனங்களைக் கொண்டது வவ்வால்(Bat) இனமாகும். நாம் இந்தத் தலைப்பில் அல்லாஹ்வுடைய படைப்புக்களில் மற்றவற்றிலிருந்து வவ்வால் எந்த பண்புகளில், எந்த தகவமைப்பில் வேறுபட்டுள்ளது என்பதை விரிவான முறையில் பார்ப்போம்.

**“பறக்கக்கூடிய” தன்மையைப் பெற்ற ஒரே பாலூட்டி-வவ்வால்(Bat)**

குட்டி போட்டு பறக்கக்கூடிய தன்மையைக்கொண்ட இந்தப்பாலூட்டி பல அதிசியத்தக்க தன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.



உலகில் உள்ள பாலூட்டிகளில் மிகச்சிறியது பம்பல்பீ (Bumble Bee) வவ்வால் ஆகும். தங்கள் உடல் எடையைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக உண்ணக்கூடியவை. அதிசயத்திலும் அதிசயம்!

வவ்வால்கள் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகளின் உருவ அமைப்பை வைத்து பெரிய வவ்வால்கள் (Mega bats) எனவும் சிறிய வவ்வால்கள் (Micro bats) எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய வவ்வால்களில் குறிப்பிடத்தக்கது பிளையிங் ஃபாக்ஸ் (Flying fox) வவ்வால் ஆகும். இவை அதிகபட்சமாக 41 செ.மீ வரை வளரக்கூடியது. சிறிய வகை வவ்வால்களில் குறிப்பிடக்தக்கது பம்பல்பீ (Bumble Bee) வவ்வால் ஆகும். இவை 3 செ.மீ நீளமும், 2 கிராம் எடையும் உள்ளதாகும். இதுதான் உலகில் உள்ள பாலூட்டிகளில் மிகச் சிறியதாகும்!

மேலும் இவைகளின் உணவு முறைகளை வைத்தும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று பழங்கள், பூக்கள் மற்றும் பூக்களின் குளுகோஸ், மகரந்தத் தூள் ஆகியவற்றை உண்டு வாழக்கூடியவை. மற்றது சிறிய பூச்சிகள் வண்டுகள் சிறிய வகை பாலூட்டிகள் சிறிய பறவைகள், ஈக்கள், கொசுக்கள், தவளை மற்றும் மீன்கள் ஆகியவற்றை உண்டு வாழுகின்றன.

வவ்வால்களில் மொத்தம் 951 இனங்கள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள். அவற்றில் மூன்றே மூன்று வகைகள் உயிர் பிராணிகளின் இரத்தத்தை மட்டுமே குடித்து உயிர் வாழக்கூடியது. உதாரணமாக வம்பயர் வவ்வால்கள் (Vampire) இவைகளின் கூரிய பற்களைக்கொண்டு முதலில் பிராணிகளின் உடலில் காயத்தை ஏற்படுத்துகின்றன. அதிலிருந்து ஒரு முறைக்கு 20 மில்லி வரை இரத்தத்தைக் குடிக்கின்றன. இந்த அளவு அவற்றின் எடையில் 40 சதவிகிதம் ஆகும். மேலும் ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் வோல்ட் வார்ல்ட் ப்ரூட் வவ்வால்கள் (Old world fruit bats) ஒரு வேளைக்கு 500 கிராம் வரை பழங்களை உண்ணுகின்றன. இந்த அளவு இவற்றின் எடையைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகும். இதுவே அல்லாஹ்வின் ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்ச்சிதான்! நம்முடைய பகுத்தறிவுக்கு ஏற்றுக்கொள்ள இயலாத ஒரு விஷயமாக இருப்பினும் கூட அல்லாஹ்வுடைய ஆற்றலை எண்ணி வியப்படையக்கூடிய சம்பவமாகவே இது அமைந்துள்ளது.

## தங்குமிடங்கள்

வவ்வால்கள் பொதுவாக ஒரு சமுதாயமாகக் கூடி வாழுகின்றன. ஒரு கூட்டத்தில் 2000-க்கும் மேற்பட்ட வவ்வால்கள் வாழுகின்றன. இவைகள் வருடம் முழுதும் தங்களுக்கு உணவுத்தட்டுப்பாடின்றி கிடைக்கக்கூடிய இடங்களை தேர்வு செய்து வாழுகின்றன. உலகின் அனைத்துப் பிரதேசங்களில் காணப்பட்டாலும் கூட மிக அதிக அளவில் வெப்பம் மிகுந்த நாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. இவைகள் குகைகள், பாறை இடுக்குகள் பொந்துகள், பள்ளங்கள் ஆகியவற்றில் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளுகின்றன. இன்னும் சில வவ்வால்கள் நாம் காணக்கூடிய வகையிலே மரங்களின் கிளைகளிலே தலைகீழாக தொங்கிக்கொண்டிருக்கின்றன.

இவைகள் தலை கீழாக தொங்கக்கூடிய இந்த செயலும் கூட மற்ற எல்லாவற்றிலும் வேறுப்பட்டுள்ள ஒரு நிலைதான்! மேலும் தலை கீழாக தொங்குவதற்கு எந்தவிதமான சக்தி இழப்பும் இவைகளுக்கு ஏற்படுவதில்லை. இதுவும் ஒரு ஆச்சரியமான நிகழ்வாகும்.



மனிதர்களைப் பொறுத்தவரை இரண்டு நிமிடங்கள் கைகளை ஒரே நிலையில் தூக்கி வைக்க இயலாது என்பதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். இவைகள் தலைகீழாக தொங்கும் போது இவற்றின் உடல் எடையின் காரணமாகப் பின்புற கால்களின் தசை நார்கள் ஒன்றுடன் ஒன்று தன்னிச்சையாக கோர்த்து இணைந்துக் கொள்வதன்மூலம் இவற்றின் விரல் நகங்கள் தொங்கும் மேற்புறத்தை இறுகப்பற்றிப் பிடித்துக் கொள்கின்றன. இதனால் எந்த விதமான சிரமமுமின்றி இவை உறக்கத்தில் ஈடுபடுகின்றன.

உலகில் உள்ள உயிரினங்களில் ஆண் இனத்தின் மார்பில் பால் சுரக்கும் சம்பவம் தயாக் (Dayak) வவ்வால்களில் மட்டுமே காணக்கூடிய அதிசயம்!

நாம் பொதுவாக அறிந்திருப்பது என்னவென்றால் முட்டையிடுதல், கற்பமடைதல் பாலூட்டுதல் போன்ற பண்புகளை பெண் உயிரினங்கள்தான் பெற்றிருக்கின்றன. 1994 ஆம் ஆண்டு விஞ்ஞானிகள் ஓர் உண்மையினை கண்டறிந்தார்கள். மலேசியாவில் வசிக்கக்கூடிய தயாக் (Dayak) பழந்தின்னி வவ்வால்களில் 10 ஆண் வவ்வால்களை ஆராய்ச்சி செய்து ஒரு அதிசியத்தக்க முடிவினை வெளியிட்டார்கள். நம் கற்பனையிலும் உதிக்காத ஒன்று ஆண் வவ்வால்களின் மார்பகங்களில் பால் சுரந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பாலூட்டிகளில் ஆண் உயிரினத்தின் மார்பில் பால் சுரக்கக்கூடியது இது ஒன்றாகத்தான் இருக்கும். இந்த தகவமைப்பு அல்லாஹ்வுடைய அரும்பெரும் ஆற்றலை காட்டக்கூடியதாகவும் “நான் அனைத்திற்கும் ஆற்றலுடையவன்” என்பதை இந்த உலகத்திற்கு உணர்த்தக் கூடிய நிகழ்ச்சியாகவே நமக்குத் தோன்றுகின்றது!

**தூரப்பிரதேசத்தின் தட்பவெப்ப நிலைகளை துல்லியமாக அறிந்து 1600 மைல்களைக் கடந்து செல்லும் அதிசய ஆற்றல்!**

வவ்வால்கள் சராசரியாக மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கும் ஆற்றலுடையவை. சில வகை வவ்வால்கள் வருடம் முழுதும் ஒரே மரத்தில் தங்கிவிடுகின்றன. ஆனால் சிலவகை வவ்வால்கள் உதாரணமாக மெக்ஸிகன் பிரிடெய்ல் வவ்வால்கள் குளிர் காலங்களில் தங்கள் இருப்பிடத்தை மாற்றி வெப்பப் பிரதேசங்களுக்கு பெரும் தூரத்திற்கு புலம்பெயர்ந்து செல்லுகின்றன. அமெரிக்காவிலிருந்து 1600 மைல்களைக் கடந்து மெக்ஸிகோவை வந்தடைகின்றன. இவைகள் எப்படி இவ்வளவு தூரப்பிரதேசத்தின் கால தட்ப வெப்பநிலையை துல்லியமாக அறிகின்றன என்பதை விஞ்ஞானிகளால் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. இவைகளின் மூளைப்பகுதியில் பூமியின் காந்த மண்டலங்களை அறியக்கூடிய அமைப்பு எதுவும் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்றார்கள். நம்மைப் பொருத்த வரை “தேனீக்களுக்கு வஹீ அறிவிக்கக்கூடிய இறைவன்” இந்த வவ்வால்களுக்கும் வஹீ அறிவித்துத்தரலாம் என்பதில் மிக எளிதாக விடை கிடைத்துவிடுகின்றது.

**அடர்ந்த இருளிலும் பார்க்கக்கூடிய கண் அமைப்பு**

வவ்வால்கள் பகல் பொழுதை ஒய்விற்கும் இரவுப் பொழுதைத் தங்கள் வாழ்க்கைத் தேவைக்கும் பயன்படுத்துகின்றன. இவைகள் அந்திப்பொழுது முதல் வைகறைப்பொழுது வரை மிகச்சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவை. இரவில் இயங்கக்கூடிய சில உயிரினங்களில் வவ்வாலும் ஒன்றாகும். இரவில் நன்கு பார்க்கக்கூடிய கண் அமைப்பைப் பெற்றிருக்கின்றன. அடர்ந்த இருளிலும் குறைந்த வெளிச்சத்திலும் நன்கு பார்க்கக்கூடிய கண் அமைப்பினைப் பெற்றுள்ளன. தூரக்கடல் தீவுகளில் வசிக்கக்கூடிய சில வவ்வால்கள் மாத்திரமே பகல் பொழுதில் தங்கள் இறையைத் தேடுகின்றன. இவைகளோடு மனிதர்களுக்கு உள்ள தொடர்பு இவற்றின் திடீர் குறுக்கீடு காரணமாக மனிதர்கள் சிலசமயம் பயத்திற்கு ஆட்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. சராசரியாக வருடத்திற்கு ஒரு மனிதர் வவ்வாலினால் கடிக்கப்பட்டு இறப்பதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இவை நாய் மற்றும் வண்டு கடித்து இறப்பவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகக்குறைவு.

“மஸ்டிப் வவ்வால்களின் ஒரு காலனி(கூட்டம்) ஒரு இரவில் 250 டன் எடையுள்ள இரையை உண்டு முடிக்கக்கூடிய அபரிதமான ஆற்றல்”

**“எங்கள் இறைவா! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை”** ***(அல்குர்ஆன் 3:191)***

சமீப காலங்களில் மனிதர்கள் வவ்வால்களின் பயன்பாடுகளை வெகுவாக அறிந்து வருகின்றார்கள். பொதுவாக வவ்வால்கள் கதைகளிலும் மற்றும் தொலைக்காட்சிகளிலும் தீய சக்திக்கும் சாத்தானிய சக்திகளுக்கும் உதாரணமாகக் கூறப்படுகின்றது. ஆனால் இன்றைய விஞ்ஞானிகள் இவைகளின் அளவற்ற பயன்பாடுகளைப்பற்றி சிலாகித்து கூறுகின்றனர். இவை முக்கியமாக மனிதர்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய பூச்சி, கொசு, வண்டு மற்றும் ஈக்களை தங்கள் முக்கிய உணவாக உட்கொள்கின்றன. மெக்ஸிகோவில் வாழக்கூடிய மஸ்டிப்(mastiff) வவ்வால்கள் காலனியாக(கூட்டமாக) வாழக்கூடியது. இந்த வவ்வால்களின் ஒரு காலனி(கூட்டம்) ஒரு இரவில் 250 டன் (இரண்டு லச்சத்தி ஐம்பது ஆயிரம் கிலோ) எடையுடைய பூச்சி, வண்டு மற்றும் கொசுக்களை தங்கள் உணவாக உண்ணுகின்றன என்று சொன்னால் சுபஹானல்லாஹ், இறைவன் இவற்றைக்கொண்டு மனிதர்களுக்கு ஏற்படுத்தியுள்ள (Pest control) பாதுகாப்பு அரணை வார்த்தைகளால் விளக்க முடியாது. சிறிய பழுப்பு நிற வவ்வால்கள் (Little brown bat) ஒரு மணி நேரத்தில் 600 கொசுக்கள் வரைப் பிடித்து உண்ணக்கூடியவை. இதிலிருந்து இவை மனித குலத்திற்கு ஆற்றக்கூடிய அளவற்ற தொண்டினை வார்த்தைகளினால் எங்ஙனம் விளக்க இயலும். பல நாடுகளில் இன்று மக்களுக்கு நோய்களையும் இன்னபிற தொல்லைகளையும் கொடுக்கும் கொசுக்களை அழிக்க பட்ஜட் போட்டுக்கொண்டிருப்பதை பார்க்கின்றோம். இது கருணை மிக்க நம் இறைவன் அமைத்துள்ள வாழ்க்கைச் சுழற்ச்சி என்பது ஒன்றை ஒன்று சார்ந்து வாழக்கூடிய அமைப்பாகும். மேலும் இவைகள் தங்கள் உணவாக பழங்களான வாழை, மாம்பழம், கொய்யா பேரிச்சை, அத்தி ஆகியவற்றை உண்பதனால் வவ்வால்களின் மூலம் அயல் மகரந்தச்சேர்க்கை நடைப்பெற பெரிதும் துணைச்செய்கின்றன. இவைகளின் மூலம் 500 க்கும் மேற்பட்ட தாவரங்களின் மகரந்தச் சேர்க்கை நடைப்பெற்று வருவதாக அறிய வந்துள்ளது. மேலும் இவற்றின் கழிவுகளில் மிக அதிக அளவிற்கு நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் உள்ளதால் மிகச்சிறந்த உரமாகப் பூமிக்கு அமைந்துவிடுகின்றன. பல நாடுகளில் இவை வசிக்கக்கூடிய இடங்களிலிருந்து இவற்றின் கழிவுகள் சேகரிக்கப்பட்டு விவசாயத்திற்குத் தேவையான மிக உயர் தரமான உரம் தயாரிக்கப்படுகின்றது. இவையும் இவற்றின் பயன்பாடுகளின் மிகமுக்கியமானதாகும்.

மனிதர்களுக்கு நேரடியான பயன்களும் இவற்றில் உள்ளன. வம்பைர் (vampire) வவ்வால்களின் வாயில் சுரக்கும் உமிழ் நீரிலிருந்து மனிதர்களுக்கு ஏற்படும் இதய சம்பந்தமான நோய்க்கு மருந்தும் தயாரிக்கப்படுகின்றது.

**வவ்வால்கள் பற்றிய இககட்டுரையின் தொடர் அடுத்த இதழில்... (இன்ஷாஅல்லாஹ்)**

**வவ்வால்கள் பற்றிய இககட்டுரையின் தொடர் அடுத்த இதழில்...**

**- E. உஸ்மான் அலி.**

# குறுக்கெழுத்துப் போட்டி-4




### இடமிருந்து வலம்

1) திருக்குர்ஆனின் மூன்றாவது அத்தியாயம் (6)
5) அல்லாஹ்வின் திருப்பெயர்களில் ஒன்று, உண்மையானவன் (2)
7) கணவன், மனைவியை விவாகரத்துச் செய்தல் (3)
8) பிரான்ஸின் தலைநகர் (3)
11) பெண்களின் கண்ணியத்தைக் காப்பது (3)
12) திருக்குர்ஆனின் 86 ஆவது அத்தியாயம் (3)
19) இஸ்லாத்தில் இந்த ஆடைகளை அணிய ஆண்களுக்குத் தடை (3)

### வலமிருந்து இடம்

13) யூசுப்(அலை) அவர்கள் எத்தனை ஆண்டுகள் சிறையிலிருந்தார்கள் (2)
17) நபி(ஸல்) அவர்கள் பெயரைக் கேட்டவுடன் இதனைக் கூற வேண்டும் (5)
18) அறியாமைக்கால அரபிகள் வணங்கி வந்த தெய்வங்களில் ஒன்று (2)

### கீழிருந்து மேல்

6) திங்கள்,... ஆகிய கிழமைகளில் நோன்பு வைப்பது நபி வழியாகும் (4)
7) “அல்லாஹு அக்பர்” என்பதை இவ்வாறு கூறுவர் (4)
10) மனைவி கணவனிடமிருந்து தானாகப் பிரிந்து செல்லும் முறை (2)
19) முக்கனிகளில் ஒன்று (2)

### மேலிருந்து கீழ்

1) முஹர்ரம் மாதத்தின் 10ஆவது நாளில் நோற்கும் நோன்பின் பெயர் (3)
2) பாவமன்னிப்புத் தேடுதல் (6)
3) சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய ஜனாதிபதி (3)
4) பல் துலக்கும் குச்சி (4)
9) எலிகளால் பரவும் நோய் (3)
11) “இக்ர∴” என்பதன் பொருள் (2)
13) தமிழகத்தின் கோடைவாசஸ்தலங்களுள் ஒன்று, சேலம் மாவட்டத்தில் உள்ளது (4)
14) தெரிந்தவர்களுக்குக் கடிதம் எழுதும்போது இதை விசாரித்து எழுதுவது முறையாகும் (3)

☆ ☆

## விதிமுறைகள்

1. விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகதில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். அல்லது தபால் மூலம் அனுப்புவோர் Mr.Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628, Jeddah-21438, என்ற முகவரிக்கு மாதம் ரபியுல்-அவ்வல் 30ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

2. விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் அல்லது கீழிலிருந்து மேல் ஆகியவைகள் எழுதி அனுப்பவேண்டும்.

3. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி அல்லது தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

4. ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

5. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

6. ஆசிரியர் முடிவே இறுதியானது

☆ ☆

**வாக்குறுதியை நிறைவேற்றுவோம்!**
**அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவோம்.**

யார் தம் வாக்குறுதியை நிறைவேற்றுகின்றார்களோ, (அல்லாஹ்வுக்கு) அஞ்சியும் நடக்கின்றார்களோ (அவர்கள் தாம் குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள்) நிச்சயமாக அல்லாஹ் (தனக்கு) அஞ்சி நடப்போரை நேசிக்கின்றான். (அல்-குர்ஆன் : 3:76)

**வாசகர்கள்! – கருத்து!**

அன்பிற்குரிய “சுவனப்பாதை” வாசகர்களே!!! சுவனப்பாதையில் பிரசுரமாகும் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் குறித்த உங்கள் மேலான கருத்துக்களை “சுவனப்பாதை” பத்திரிக்கைக் குழு வரவேற்கிறது. உங்களின் கருத்துக்கள், எண்ணங்கள், உங்களின் எழுத்துப் படைப்புகள் என எதுவாகினும் கீழ்கண்ட முகவரிக்கு மடல் மூலம் அனுப்பலாம்.

Mr.Ibrahim(Madani), Tamil Division,
**P.O.Box-32628**, Jeddah-21438, K.S.A
email : suvanam@gmail.com